நெல்

- நடவு வரிசையில் அமைக்கப்பட்டதால் களைகளை உருளைக் களை எடுப்பான் கொண்டு மண்ணினுள் அழுத்தி விடுதல் வேண்டும்.
- உருளைக் களை எடுப்பானை முன்னும் பின்னுமாய் அசைத்து களை எடுப்பானை உருட்டி களையைக்களைவதுடன் மண்ணினுள் காற்று புகுமாறு உருட்டுவது பயிரின் வேரிற்கு நல்லது.
- இவ்வாறு களை எடுப்பது நட்ட 10 நாட்களிலேயே ஆரம்பிக்கப்படலாம். 10 நாட்கள் இடைவெளியில் மீண்டும் மீண்டும் உருளைக் களை எடுப்பானைப் பயன்படுத்தி பலன் பெறலாம்.
- பயிர்களுக்கு இடையே வேரிற்கு அருகில் உள்ள களைகளைக் களைய கைக்களை எடுப்பதும் அவசியமாகின்றது.





நட்டதிலிருந்து 10 நாட்களுக்கு ஒரு முறை ளைக்கருவியை குறுக்கும் நெடுக்குமாக உபயோகித்தல்.

**கோதுமை**



விதைத்த 3 நாட்களுக்கு பின்னர் எக்டருக்கு 800 கிராம் என்ற அளவில் ஐசோபுரோட்டுரான் என்ற களைக்கொல்லி மருந்தினை தெளிக்கவேண்டும். விதைத்த 35 நாட்களுக்குப் பின்னர் கைக்களை எடுக்கவேண்டும். களைக்கொல்லியை தெளிக்கவில்லையெனில் விதைத்த 20வது மற்றும் 35வது நாட்களில் இரண்டு கைக்களை எடுக்கவேண்டும்.

கம்பு



விதைத்த மூன்றாக நாள் அட்ரசன் 500 கிராம் களைக்கொல்லியை 900 லிட்டர் தண்ணிரில் கரைத்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவேண்டும். ஊடுபயிராக பயறு வகைப் பயிர்களை பயிர் செய்திருந்தால் அட்ரசின் உபயோகப்படுத்தக்கூடாது.

விதைத்த 15,30 ஆம் நர்களிலும் நடவு செய்த 10,35 வது நாட்களிலும் களை எடுக்கவேண்டும் அல்லது சோளம் தனிப்பயிராக அருந்தால் அட்ரசின் (500 கிராம், எக்டர்) ஊடுபயிர் சாகுபடி செய்தால் பென்டிமெத்தலின் என்ற களைக் கொல்லியைப் பயன்படுத்தலாம்.